RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s19100

# எட்டுத்தொகை நூல்களில் இலக்கியக் கோட்பாட்டு நயம்

**தி. சங்கீதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, மருதுபாண்டியர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்-613403, தமிழ்நாடு, இந்தியா

# Literary Theoretic Elegance of the Eight Anthologies

**T. Sangeetha** [a, *]

[a] Department of Tamil, Marudhupandiyar College, Thanjavur-613403, Tamil Nadu, India

* Corresponding Author: sangeetha151079@gmail.com

Received: 13-07-2022
Revised: 01-10-2022
Accepted: 17-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Literature, literary theory and literary theory are shaped by human life. Life also. Sentiment, policy and theory evolve along with literature over time. Literature is shaped by inner nature. Those that include ideas are classified as dependent literature and focus on the author's experience level. The regularity in the form and content of literature due to a particular literary principle is called literary theory. Sangha literature is the pillar of the proud civilization development of Pazhanthamizhar. All the various messages that appear in the Sangha literature are being examined from many angles today. Thus, various new news is brought out about Pazhanthamizhar. Research using theory is emerging as a new discipline in contemporary research. The application of these theories, developed in the highlands, has been accepted as very important in the field of research today. Among the Western theories thus developed, the coding theory, which is considered to be the most important in sociological study, leads to a new perspective in the study of associational literature. The use of this index in studying sociology, culture, etc. in sangam literature presents an elegant research method and contributes to uncovering many elements found in sangam literature. The four objects of virtue, meaning, pleasure, family are the lifeblood of Sangha literature theory. In this study, only a few of the songs that express the inner feeling songs and the life norms of the Tamil people can be found in the Eight Anthologies of sangam literature.

**Keywords:** Sangam Literature, Eight Anthologies, Pazhanthamizhar, Civilization

## முன்னுரை

இலக்கியக் கோட்பாடு என்பது இலக்கியத்தை எப்படி எழுதுவது, எப்படி வாசிப்பது என்றும் அதை எழுதுபவர்கள் மற்றும் வாசிப்பவர்கள் அல்லாத மூன்றாம் தரப்பினரால் கூறப்படும் உறுதியான கருத்து நிலைப்பாடு என்பதாகும். இலக்கியத்தைப் பற்றி யோசிக்கும் போது கருத்துக்கள் தோன்றுகின்றன. பிற்பாடு இவை கொள்கைகளாகவும் ஆகின்றன. இரு எண்ணம் சற்று சந்தேகத்துடன் முன்வைக்கப்படும்போது அது கருத்து எனப்படுகிறது. உறுதியாக முன்வைக்கப்பட்டால் அதை கொள்கை என்கிறார்கள். சொன்னவருக்குக் கொஞ்சம் ஐயம் வந்த பிறகும் பிறருக்கு அதன் மேல் உறுதிப்பாடு இருக்கும் என்றால் அது கோட்பாடு. இலக்கியக் கோட்பாடு எவ்வாறு எட்டுத்தொகை நூல்களில் பயின்று வருகின்றன என்பதனை இக்கட்டுரையில் காண்போம்.

## இலக்கியத்தின் வரையறை

இலக்கியம் பற்றி பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் (1999) இலக்கியம் மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டது, மனிதனின் சிந்தனைக்கும், உணர்வுக்கும், கற்பனைக்கும் விருந்தாக அமைவது. மனிதனின் மொழியோடு தொடர்புடையது, குறிப்பிட்ட “ஒரு வடிவினைச் செய்யுளாலோ, உரைநடையாலோ உடையது, கற்பவருடைய எண்ணத்தில் எழுச்சியையும், இதயத்தில் மலர்ச்சியையும் உண்டாக்கும் ஆற்றல் வாய்ந்தது, இன்புறுத்துவதோடு அறிவுறுத்தும் ஆற்றலை உடையது” என்று அ.ச. ஞானசம்பந்தன் எடுத்துரைப்பார் (Gnanasambandan, 1999).

உள்ளத்தைத் திறப்பதற்கும், அதைத் திருத்துவதற்கும், அதைச் செம்மைப்படுத்தற்கும், புரிந்து கொண்டு படிப்பதைச் செரிப்பதற்கும், தவறுகளைப் போக்கும் வன்மை உண்டாக்குவதற்கும், நல்லவற்றை மேற்கொள்வதற்கும், பிறர்க்கு எடுத்துரைப்பதற்கும், பிறரை நல்வழிப்படுத்தற்கும் இலக்கியம் பயன்படல் வேண்டும். இந்நிலையில்தான் அஃது இலக்கியம் ஆகும். என்பது கார்டினல் (1988) என்பவர் கருத்தாகும்.

இவ்வாறு இலக்கியம் பல காரணங்களைக் கொண்டு தோன்றுகிறது. இவற்றுள் ஒழுங்கு, வரையறை, அழகு, பயன் ஆகியவை நிறைந்துள்ள இலக்கிய நூல்களே படிப்போர்க்கு இன்ப உணர்ச்சியை உண்டாக்கும். அவையே ஒரு சமுதாயத்தின் அழியாத செல்வங்களாகும். அவற்றுள் தலைசிறந்தவை சங்க நூல்கள்.

## இலக்கியத்தின் இயல்புகள்

அறிஞர் ந. சஞ்சீவி, இலக்கியத்தின் சிறப்பு இயல்புகளாகக் கூறும் நான்குக் கருத்துக்கள், புதுமை, பெருமை, பொதுமை, பொருண்மை ஆகியனவாகும்.

### இவற்றுள் புதுமை இருவகைப்படும். அவையாவன

1. பாடுபொருளாகிய பொருண்மையில் புதுமை, 2. புத்தாக்கங்கள் இடம் பெறும் மற்றும் உணர்த்தும் முறையில் புதுமை. பொதுநலப் பண்பில் சிறந்ததாகவும், புதுமைக் கவர்ச்சி வாய்ந்ததாகவும், விளங்கும் இலக்கியமே பெருமையுடையதாகக் கருதப்படும். இலக்கியத்தின் இந்நால்வகைப் பண்புகளும் ஒன்றோடொன்று இணைந்தும் பிணைந்தும் இயங்குகின்றன.

### அக இயல்புகள்

1. கலையழகு, 2. குறிப்பாற்றல், 3. நிலைபேறுடைமை, 4. ஆசிரியரின் ஆளுமை, 5. இன்புறுத்தல், 6. கற்பனை, 7. குறிக்கோள் ஆகிய ஏழினையும் கூறுவர்.

### புற இயல்புகள்

புற இயல்புகளாக, பின் வரும் வடிவப் பண்புகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. அவையாவன, 1. சீர், 2. தளை, 3. தொடை, 4. எதுகை, 5. மோனை, 6. ஒலிநயம், 7. உவமை, 8. உருவகம், 9. படிமம், 10. குறியீடு முதலான அணிநயங்களாகும் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

## இலக்கியத்தின் பாகுபாடு

பொதுவாக இலக்கியம் வடிவஅமைதி, பொருள், வெளிப்பாட்டு முறை ஆகியவற்றைக் கொண்டு பல வகையாகப் பாகுபடுத்தலாம். இலக்கியம் பெரும்பாலும் உணர்வைச் சார்ந்து அமைவது ஆகும்.

## அயல்நிலைப் பாகுபாடு

இலக்கியத்தைத் தூய இலக்கியம், சார்பு இலக்கியம் என வகைப்படுத்துவர். இவற்றுள் தூய இலக்கியம் எனப்படுவது, இலக்கியத்தின் இயல்புகள்யாவும் முழுமையாக இடம் பெற்றுள்ள படைப்பிலக்கியமாகும். கற்பனைக்கோ, கலையழகிற்கோ இடம் தராமல் கருத்துக்களை அறிவுறுத்தும் இலக்கியம் சார்பு இலக்கியமாகும்.

## அனுபவ நிலைப்பாகுபாடு

ஓர் இலக்கிய படைப்பானது, படைப்பாளனின் அனுபவத் தன்மை, செறிவு வகை, மனித உறவு, முயற்சித்திறன் ஆகியவற்றிற்கேற்பப் படைக்கப்படுகிறது. இந்த அனுபவ நிலையையும் பொருளின் இயல்பையும் கருத்தில் கொண்டு இலக்கியம், ஐந்து வகைப்பட்டனவாகப் பாகுபடுத்தப்படும்.

1. தன் சொந்த அனுபவத்தின் அடிப்படையில் படைக்கப்படும் இலக்கியம். இவற்றுள் முதன்மை இடம் பெறுவது தன்னுணர்ச்சிப் பாடல்களாகும். அடுத்து இசைப்பாடல்களும் பக்திப் பாடல்களும், அனுபூதிப் பாடல்களும், இரங்கற்பாக்களும், தன் வரலாறுகளும், பயணநூல்களும், வாழ்க்கை விளக்கமும், கலை இலக்கியத் திறனாய்வுகளும் அடங்கும்.
2. மனித இனத்தின் பொதுவாக அமைந்த வாழ்க்கையைப் பற்றிய இலக்கியம் அறநூல்கள், காப்பியங்கள், வரலாற்று நூல்கள், அம்மானைப் பாடல்கள், கதைப் பாடல்கள், கதைகள், புதினங்கள், நாடகங்கள் முதலானவை உதாரணங்களாகும்.
3. பல்வகையாக விரிந்து கிடக்கும் சமுதாயத்தைச் சித்தரிக்கும் இலக்கியம், இதனுள் வருணனை, விளக்கம் கிளத்தல் நிறைந்த இலக்கிய வகைகள் அடங்கும். கம்பனின் இராமகாதை போன்ற காப்பியங்களும், மதுரைக் காஞ்சி, பட்டினப் பாலை, மலைபடுகடாம் போன்ற வருணனை செய்யுள்கள் எடுத்துக்காட்டு ஆகும்
4. இயற்கை பற்றி எழுந்த இலக்கியம் அழகின் சிரிப்பு, ஆற்றுப்படைகள், ஐந்திணைப் பாடல்கள், குறவஞ்சி இலக்கியங்கள், காப்பியங்களில் இடம் பெறும் நாட்டு, நகர, ஆற்றுப் படலங்கள் முதலியனவாகும்.
5. இலக்கியம் பற்றியும் கலைநயம் பற்றியும் எடுத்துரைக்கும் இலக்கியம். ஐந்து இலக்கண நூல்கள், தண்டியலங்காரம், உவமான சங்கிரகம் போன்ற அணியிலக்கண நூல்கள் பஞ்ச மரபு, கூத்து நூல் போன்ற கலை விளக்க நூல்கள் அடங்கும்.

## வடிவ அமைதிப் பாகுபாடு

“துறை, தாழிசை, விருத்தம் உள்ளிட்ட செய்யுள்கள், யாப்பிலக்கியங்கள், உரைநடை இலக்கியங்கள் இதன் பாற்படும்” பேரா.அ.ச. ஞானசம்பந்தன் (Gnanasambandan, 1999).

## இலக்கியத்தின் உள்ளடக்கம்

“புறவய யதார்த்தத்தின் கலைப் படைப்பே இலக்கியத்தின் உள்ளடக்கம்” முதலாவதாக இது உண்மைக்கும் கலைப்படைப்பிற்கும் உள்ள உறவையும் அடுத்து கலை பிரதிபலிப்பினை அதன் தொடர்புகளோடு ஆராய்வதாகும் (Vaanamaamalai, 1999).

## இலக்கியத்தில் உருவம்

உருவத்தின் இரு தன்மைகள் வருணனையும், உணர்ச்சி வெளியீடும் ஆகும். இதன் கூறுகளாவன. 1. கலை இயைபு, 2. கலைப் பின்னல், 3. கலையின் உள்ளடக்கம், உருவம் இவற்றின்

ஒருமை, 4. உள்ளடக்கத்தின் சாரம் உருவத்தில் பொதிந்திருத்தல், 5. அனுபவத்தின் பொதுமை, உருவத்தில் வெளிப்படுதல், 6. உருவ, உள்ளடக்க விகாரங்கள்.

### கலை இயைபு

ஒரு கலைப் படைப்பில் அதன் பகுதிகளுக்கும் அதன் முழுமைக்கும் இடையேயான இணைப்பே கலை இயைபு ஆகும்.

### கலைப்பின்னல்

ஒரு கருத்தைக் கலைப்படைப்பாக மாற்றுவதற்குக் கலைப் பின்னல் ஊடகமாக இருக்கிறது. இயைபும் கலைப் பின்னலும் உருவத்தின் இன்றியமையாதப் பகுதிகளாகும்.

## இலக்கியக் கொள்கையும் கோட்பாடும்

சங்க இலக்கியக்கொள்கைகள் பெரும்பாலும் உலகத்தை அடிப்படையாகக் கொண்டது. அது போலச் செய்தல் (Mimetic Theory) என்பதாகும். உலக வாழ்க்கையும், நாடக வாழ்க்கையும் வேறுபடுத்தி அவர் வாழ்வை நாடக இலக்கியப் பாங்கில் பகுத்துத் தொகுக்கப்படுகிறது.

ஒருவரால் ஏற்றுக் கொள்ளப்படும் எண்ணக் கருத்துகள் ஆகியவற்றைக் கொள்கையெனலாம். தொடர்ந்து குறிப்பிட்ட இலக்கியக் கொள்கை காரணமாக இலக்கியத்தின் உருவிலும் பொருளிலும் ஏற்படும் அமைவு நெறி அல்லது ஒரே சார்பான அமைவுநெறி அல்லது ஒரே சார்பான அமைவு நெறிகளின் தொகுதி (ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறி) கோட்பாடு என்றும் அழைக்கப்படும்.

## சங்க இலக்கியத்தின் உயிர்நாடி

மனிதப் பேறுகள் ஆகிய அறம்-பொருள்-இன்பம்-வீடு என்னும் நான்கும் சங்க இலக்கிய கோட்பாட்டின் உயிர்நாடியாக விளங்குகிறது. மனிதன் இன்பம் பற்றியே பொருளைத் தேடுகிறான். பொருள் கொண்டு அறம் செய்கிறான். இம் முப்பேறுகளும் செம்மையுறச் செய்பவன் நான்காம் பேற்றை இயல்பாகவே அடைவான் இதனாற்றான், பண்டைத் தமிழர் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையுமே வாழ்க்கையின் உயிர்நாடியாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர் என்பது சங்கப் பாடல்களால் அறியக் கிடைக்கிறது.

தொல்காப்பியர்க்கு முற்பட்ட தொல்லாசிரியர்கள் வகுத்த அகம், புறம் என்னும் இரண்டு பகுதிகளையும் தழுவி தம் காலத்திய மாறுதல்களையும் உள்ளடக்கித் தொல்காப்பியர் எழுதியுள்ள பொருள்இலக்கணம் ஒன்றே இன்றுள்ள சிறந்த அடிப்படை இலக்கண நூலாகும். அதனை இலக்கணமாகவும், அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, திருக்கோவையார் முதலியவற்றை இலக்கியமாகவும் கொண்டு ஆராயின், பழந்தமிழ்ப் பெருமக்கள் பகுத்தறிவோடு அமைந்த அகப்பொருளென்னும் அழகிய இன்ப மாளிகையைக் கண்டுகளிக்கலாம். இவற்றுடன் சைவசமய ஆசிரியர்கள் பாடியருளிய திருமுறைகளையும் ஆழ்வார்கள் பாடியருளிய அருட்பாடல்களையும் பக்கத்தில் வைத்து உணர்ச்சியோடு படிக்கப் படிக்க அப்பெரியோர்கள் அகப்பொருள் இலக்கணத்தைத் தமது பக்தி நெறிக்கே உயிர் நாடியாகக் கொண்டிருந்தனர் என்பதைத் தெள்ளிதில் உணரலாம்.

## எட்டுத்தொகையில் அகஉணர்வுப் பாடல்கள்

### காதல் மிகுதி

வருணனைக் குறைந்தும் உணர்வு மிகுந்தும் வழங்கும் இப்பாடல்கள் அகத்திணையின் உயிரோட்டத்தைக் காட்ட வல்லனவாயுள்ளன.

“நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று

நீரினும் ஆரள வின்றே சாரல்

கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு

பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே”.

தலைமகள் தோழியிடம் தலைவன் அன்புடைமையை வற்புறுத்தும் சூழல் ஒன்று வருகிறது. அப்போது அவள் அக்காதல் நிலத்தைவிடப் பரந்ததாக வானைவிட உயர்ந்ததாக, நீரைவிட ஆழமானதாக விளங்குவதெனக் கூறுகிறாள் (Vaiyaapurip Pillai, 2015).

## காதலர்ப் பிரிவு

பிரிந்த தலைவன் உரிய காலத்தே திரும்பினானில்லை, அதனால் தலைவி சோகமே வடிவாயினாள், உள்ளங்குமைந்தாள் வீட்டினுள்ளிருந்து பலகணி வழியாகப் பறவைகள் மாலை நேரத்தில் கூடுநோக்கிப் பறந்து போவதைப் பார்க்கிறாள் அஃது அவள் கவலையை மேலும் அதிகரிக்கச் செய்கிறது இதைப்போலத் தன் தலைவனும் வீடுநோக்கிப் பறந்து வரவில்லையே என அவள் நெஞ்சம் நினைத்து அழுகிறது. அதை அவள் வாய்விட்டுச் சொல்லவில்லை. அவ்வாறு வெளிப்படச் சொல்லாமல் குறிப்பாகச் சொல்வதனாலேயே, படிக்கும் நம் நெஞ்சத்தில் அவலவுணர்வு இருமடங்காகிப் பெருகுகிறது.

“ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து

அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை

இறையுற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த

பிள்ளை உள்வாய்ச் செரீஇய

இரைகொண் டமையின் விரையுமாற் செலவே” (Vaiyaapurip Pillai, 2015).

## இல்லற மாட்சி

திருமணமான புதிதில் தலைவி, தலைவனுக்குத் தானே உணவு சமைத்துப் பரிமாறுகிறாள். அனுபவக் குறைவாலும் விரைவாலும் பட்டுச் சேலையில் கையைத் துடைத்துக் கொண்டு, கண்களில் புகைபடிய அவள் சமைக்கும் அழகே, அவளுக்கு அதில் அதிகப் பழக்கமில்லை என்பதைக் காட்டுகிறது. இருந்தும் மனைவி மிகமுயன்று சமைத்ததாயிற்றே என்று கணவன் ‘இனிது இனிது’ என உண்ண, அவள் பெருந்தன்மையையும் பேரன்பையும் எண்ணி மனைவி புன்னகை பூக்க, அவ்வீட்டு இல்லற மாட்சி இனிதாக நடை பெறுகிறது. ஒரு தாய் தன் மகளின் நல்லற வாழ்வை இங்ஙனம் கண்ணாரக் கண்டு மகிழ்கிறாள்.

“முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்

கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்

குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்

தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்

இனிதெனக் கணவன் உண்டலின்

நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே” (Vaiyaapurip Pillai, 2015)

## மணப் பெண்ணுக்குக் கூறும் அறிவுரை

திருமணம் முடிக்கும் மணமக்களுக்கு நாம் இதைவிடக் கூறக் கூடிய அறிவுரைகள் எவையேனும் உளவோ? எண்ணிப்பார்மின்!

“காமம் தாங்குமதி என்போர் தாமஃது

அறியலர்கொல்லோ? அனைமதுகையர்கொல்?

யாமெங் காதலற் காணே மாயின்

செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்

கல்பொரு சிறுநுரை போல

மெல்ல மெல்ல இல்லா குதுமே” (Vaiyaapurip Pillai, 2015)

இப்பாடலை எழுதிய புலவர் பெயர் அறியப்படாத பொழுது இதனைத் தொகுத்தவர்கள் ‘கல்பொரு சிறுநுரையார்’ என இப்பாடலாசிரியர் பெயரைக் குறிப்பிட்டுள்ளனர். இதிலமைந்துள்ள சிறந்த, தனித்தன்மை வாய்ந்த உவமை கருதி ஆசிரியர்க்குப் பெயரிட்ட திறம் பாராட்டுதற்குரியதாகும்.

## புன்னையது சிறப்பு

தலைவன் தன் காதலியை அவள் வீட்டுக்கருகிலுள்ள ஒரு புன்னை மரத்தடியில் சந்தித்தான். அவள் “இது நாங்கள் விளையாடுகிற பொழுது மறந்து போட்டுவிட்ட புன்னை விதையிலிருந்து வளர்ந்தது. பிறகு நாங்கள் அதனைப் பாலும் தேனும் பெய்து வளர்த்தோம். அப்போதெல்லாம் எங்கள் தாய் உங்களை விட உங்கள் தங்கையான புன்னை மிக நல்லவள், அவள் அடமே செய்வதில்லை, எனப் பாராட்டுவாள். எனவே என் உடன் பிறப்பனைய இப்புன்னை நிழலில் உங்களுடன் அளாவ எனக்குக் கூச்சமாக இருக்கிறது. வேறு இடங்களும் அருகில் உள்ளது. நாம் அங்கே போய்ப் பேசிக் கொண்டிருப்போம்” என்கிறாள். இயற்கையையும் உயிருள்ளதாகக் கருதி நாணும் இந்நுட்பமான உணர்வு நிலையை நாம் சங்கப்பாடல்களில் கண்டு மகிழலாம்.

“விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி

மறந்தனம் துறந்த காழ்முளை அகைய

நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப

நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று

அன்னை கூறினள், புன்னையது சிறப்பே

அம்ம நாணுதல் நும்மொடு நகையே!” (Vaiyaapurip Pillai, 2015)

## இலக்கிய நயம்

தலைவியிடம் தோழி பருவ வரவைக் காட்டி, “அதோ உன் கணவரும் திரும்பி விட்டார்!” எனக் கூறி மகிழ்விப்பது கீழ்வரும் பாடலில் இலக்கிய நயத்தோடு அமைந்துள்ளது.

“முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு

பைங்காற் கொன்றை மென்பிணி அவிழ

இரும்புதிரித் தன்ன இரலை தெறிப்ப

மலர்ந்த ஞாலம் புலம்புறக் கொடுப்பக்

கருவி வானம் கதழுறை சிதறிக்

கார்செய் தன்றே கவின்பெறு கானம்!

குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி

நரம்பார்த் தன்ன வாங்குவள் பரியப்

பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த

தாதுண் பறவை பேதுறல் அஞ்சி

மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்

உதுக்காண் தோன்றும்!” (Vaiyaapurip Pillai, 2015)

தேன் குடிக்கும் வண்டுகள் அஞ்சி ஓடக்கூடாதே என்று மணியின் நாவைக் கட்டித் தேரில் வரும் தலைமகனின் மனவுணர்வு குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் தம் தொல்காப்பிய உரையில் இதன் நயத்தை மிக நுட்பமாக எடுத்துக்காட்டியுள்ளார்.

## வடிவமைப்பும் பொருட் செறிவும்

ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும் பத்துக்களாக இருப்பதனால் தொகை நூல்களில் சேர நாட்டினர் புதுமை புகுத்த முயன்றனர் போலும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆசிரியப்பாவின் சிற்றெல்லை மூன்றடிகளாகும். அடிவரையறையாற் குறைந்த சிறிய பாடல்களில் அரிய கருத்துக்களைச் செறிவாகக் கூறும் பாங்கினை இத்தொகையிற் காணலாம்.

நாடும் அரசும் வாழ்க எனத் தாய் வாழ்த்துகிறாள். தோழியோ தலைவன் மார்பு ‘பழனம்’ ஆகியப் பலர்க்கும் பொதுவாகாது, தலைவிக்கே உரித்தாக வேண்டும் என வாழ்த்துகிறாள்.

“வாழி ஆதன், வாழி அவினி!

பகைவர் புல்லார்க! பார்ப்பார் ஓதுக!

எனவேட்டோளே, யாயே: யாமே,

பூத்த கரும்பிற் காய்த்த நெல்லின்

கழனி ஊரன் மார்பு

பழனம் ஆகற்க எனவேட் டேமே” (Vaiyaapurip Pillai, 2015)

பாணன் தலைவனுக்காகப் பரிந்துபேசினான். அதைக்கேட்ட தோழி ‘நாண் இலை’ எனக் கடிகின்றாள்.

“நாணிலை மன்ற பாண நீயே

கோணேர் இலங்குவளை நெகிழ்த்த

கானலந் துறைவற்கச் சொல்லுகுப் போயே” (Vaiyaapurip Pillai, 2015)

இவ்வாறு செறிவுமிக்க சிறிய பாடல்களடங்கிய இந்நூலுக்கு ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரையெழுதியுள்ளார். எருமைப்பத்து, அன்னாய்ப்பத்து, இளவேனிற்பத்து, தெய்யோப்பத்து என இவ்வாறு இதில் பத்துக்கள் சொல்லாட்சியும் பொருளாட்சியும் கருதிப் பெயரிடப்பட்டுள்ளன. இதன் அடிக்குறிப்புகள் பொருத்தமும் விளக்கமும் மிக்க தொன்மையுடையனவாகும். பத்துக்களாகப் பாடும்போதும் உரித்தன்மையுடன் பாடுவதென்றும் ஒரு பொருள் மேல் பலவடுக்கிப் பாடுவதென்றும் இவ்வாறு பலவுத்திகள் இதிலுள.

## இலக்கிய வகைமையாக்கமும் வருணனையும்

மன்னர்களைத் தனித்தனிப் பாடலாகப் பாடி மகிழ்விக்காமல், பத்துப் பத்தாகப் பாடும் மரபு தோன்றிய போதே இலக்கிய வகையாக்கம் கிளைக்கத் தொடங்கியது. பத்துப் பாடலுக்கும் செய்தி

வேண்டுமே என்ற நிலைவந்துற்ற போது வருணனைகள் மிகுதியாயின. சேரமன்னன் கடற்பகைவர்களை வென்று, அவர்களை அழித்தவன் என்பதால் அவனுக்கு முருகன் உவமையாகிறான்.

"சூருடை முழுமுதல் தடிந்த பேரிசை

கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந்தாங்கு

செவ்வாய் எஃகம் விலங்குநர் அறுப்ப

அருநிறம் திறந்த புண்ணுமிழ் குருதியின்

மணிநிற இருங்கழி நீர் நிறம் பெயர்ந்து

மனாலக் கலவை போல, அரண்கொன்று" (Vaiyaapurip Pillai, 2015)

என்பதனால் இமயவரம்பனின் வீரத்தைக் குமட்டூர்க் கண்ணனார் மிகவும் சிறப்பித்துக் கூறுகின்றமை போதுரும் இதிலுள்ள 'புண்ணுமிழ் குருதி' என்ற தொடரின் அருமை கருதி அதனையே பாட்டின் பெயராகக் குறிப்பிட்டுள்ளனர். நூலுக்குப் பெயரிடுதல் போல், நாம் இன்று பாட்டுக்குத் தலைப்பிடுதல் போல் இப்பாட்டுக்கெல்லாம் பெயர் சூட்டப்பட்டள்ளமை அன்றைய தமிழப்புலவர்களின் திறனாய்வுத் திறத்தை விளக்குகிறது. இளஞ்சேரல் இரும்பொறையைப் பெருங்குன்றூர் கிழார் வாழ்த்தும் பொழுது,

"நின்நாள் திங்கள் அனைய ஆக! திங்கள்

யாண்டோர் அனைய ஆக! யாண்டே

ஊழி அனைய ஆக! ஊழி

வெள்ள வரம்பின ஆக!" (Vaiyaapurip Pillai, 2015)

எனக் கற்பனை நயம்படக் கூறுவது புதுமையாக உளது. இங்ஙனம் புறநானூற்றுடன் பதிற்றுப் பத்தும் கிடைத்திருப்பது புறப்பாட்டுக்களை மதிப்பிடப் பெரிதும் உதவுவதாகும். ஐங்குறுநூறு போலவே பதிற்றுப்பத்திற்கும் வரையப்பட்டுள்ள அடிக்குறிப்புத் தொன்மையுடையதாகத் தோன்றுகிறது.

இதில் சேர நாட்டு வருணனை மிகுதி சேரமன்னர்களின் ஆற்றலையும், வீரத்தையும், இன்பச் சிறப்பையும் புகழ்ந்து வாழ்த்துவதையே நோக்கமாகக் கொண்டெழுந்தவை. இவை வெவ்வேறு புலவர்களால் படப்பட்டவையே. ஆனாலும் இவை அனைத்துப் பாடல்களும் ஒரு நோக்கும் போக்கும் உடையவையாகக் காணப்படுகின்றன.

## சமுதாயச் செய்திகள்

வெச்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் முதலிய புறத்திணை பலவற்றுக்கும் எடுத்துக்காட்டான பாடல்கள். மன்னர் புலவர் உறவு, மக்கள் மன்னர் உறவு, புலவர் உறவு யாவும் இந்நூலால் அறியத்தக்கன. அரசியற் புலவா் கோவூர்கிழார் பற்றியும் இந்நூல் பலசெய்திகளை அறிவிக்கின்றது. பாரி கபிலர் நட்பு, அதியன் ஔவை நட்பு, கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பு என்றினையனவும் உலகம் அறியத்தக்க பற்பல அரும்பொருட் செய்திகளும் தமிழ் மக்களின் பழக்கவழக்கங்களைப் பற்றிய பல உண்மைகளுமாக இந்நூலில் விரவிக் கிடக்கும் சமுதாயச் செய்திகள் கணக்கற்றனவாகும்.

"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ

நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை

ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்

பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!" (Vaiyaapurip Pillai, 2015)

என்று முரஞ்சியூர் முடிநாகராயர் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனைப் பாடுகிறார்.

## தமிழரின் வாழ்வியல் நெறிகள்

புறநானூறு பண்டைத் தமிழரின் வாழ்வியல் பெட்டகம். நம் மூதாதையர் நமக்குப் பாதுகாத்து வழங்கிச் சென்றுள்ள விலை மதிப்பிடமுடியாத பெரும் சொத்து, ஈறாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த தமிழரின் வாழ்வியல் நெறிகளைப் பதிவு செய்துள்ள வரலாற்று ஆவணம். மனிதனின் நிலைப்பாட்டைச் சமுதாயத்தில் வெளிப்படுத்த கல்வி ஒரு சிறந்த களமாகும். மொழிவழிக் கல்வி ஒரு சமுதாயத்தில் நல்ல மாற்றங்களை ஒரு உருவாக்குவதற்கான கருவியாகத் திகழ்கிறது. அத்தகைய கல்வியினை

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே" (Vaiyaapurip Pillai, 2015)

என்று கூறியுள்ளனர். தன்னலமற்ற பொது நலம் பேணுவாரே இவ்வுலக இயக்கத்திற்குக் காரணம் என்பதை உணர்த்தும்,

"தமக்கென முயலா நோன்தாள்

பிறர்க்கென முயலுநர் உண்மையானே" (Vaiyaapurip Pillai, 2015)

எனும் பாடல் வரிகளால் தன்னலமற்ற பிறநலத்தை உணர்த்துகின்றனர்.

## முடிவுரை

காதலையும் வீரத்தையும் சங்க இலக்கியத்தின் இரண்டு கண்களாகக் கொண்டு எழுதிய சங்கப் புலவர்களின் படைப்பிலக்கியக் கோட்பாடுகளை ஆய்வுக்கு உட்படுத்தினால், அவை அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாக ஊற்றெடுத்துக் கொண்டே வருவதை எண்ணி வியக்கத் தோன்றுகிறது. பழம்மரபு சார்ந்த வாழ்வியல் நெறிகளைக் கைக்கொண்டிருந்த நம் தமிழர்கள், உலகளாவிய மானிட வாழ்க்கை மேம்பாட்டிற்கானச் சிந்தனைகளைத் தங்கள் இலக்கியக் கோட்பாடாக மட்டுமின்றி, தகவல்தொடர்புத் தொழில்நுட்பங்கள் வளர்ச்சிபெறாத காலகட்டத்தில் வாழ்ந்த நம் முன்னோர் இன்றைய தலைமுறையினர் வியந்து போற்றும் வண்ணம் வாழ்வியல் நெறிகளை வகுத்து வாழ்வியல் கோட்பாடாகவும் இலக்கிய கோட்பாடாகவும் தந்துள்ளனர் என்பதை சங்க இலக்கிய எட்டுத் தொகை நூல்கள் வாயிலாக அறிய முயடிகின்றது.

## References


Gnanasambandan, A.S. (1999) Ilakiyakkali, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India

Vaanamaamalai, N. (1999) Ilakkiyathil Ulladakkamum Uruvamum, Makkal Veliyedu, Chennai, India

Vaiyaapurip Pillai, S. (2015) Sanga Ilakkiam Muzhuvadhum, Paari nelaiyam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License